# ஏப்ரல் - 25 - வியாழன்

### தூய மாற்கு - நற்செய்தியாளர்

### ஆண்டவரே, எங்கள் தலைவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது! திபா. 8:9

## முதல் வாசகம் : 1 பேதுரு 5 : 5 – 14

இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள். ஒருவர் மற்றவரோடு பழகும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள். ஏனெனில், ”செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்.” ஆகையால், கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள் அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார். உங்கள் கவலைகளை யெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம்போலத் தேடித் திரிகிறது. அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அதனை எதிர்த்து நில்லுங்கள். உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதரர் சகோதரிகள் உங்களைப் போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? எல்லா அருளும் நிறைந்த கடவுள், இயேசு கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம் மாட்சியில் பங்குகொள்ள உங்களை அழைத்திருக்கிறார். சிறிது காலத் துன்பங்களுக்குப்பின் அவர் உங்களைப் சீர்ப்படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி நிலைநிறுத்துவார். அவரது வல்லமை என்றென்றைக்கும் உள்ளது. ஆமென். நம்பிக்கைக்குரிய சகோதரன் என நான் கருதும் சில்வான் வழியாகச் சுருக்கமாக உங்களுக்கு எழுதியுள்ளேன். உங்களை ஊக்குவிக்கவும் கடவுளுடைய மெய்யான அருளைப் பற்றிச் சான்று பகரவுமே எழுதினேன். இந்த அருளில் நிலைத்திருங்கள். உங்களைப் போலவே தேர்ந்து கொள்ளப்பட்ட பாபிலோன் சபையாரும், என் மகன் மாற்கும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர். அன்பு முத்தம் கொடுத்து நீங்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்துங்கள். இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் உங்கள் அனைவருக்கும் அமைதி உரித்தாகுக!

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றென்றும் பாடுவேன்.

## நற்செய்தி : மாற்கு 16 : 15 - 20

இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற் கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர். அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர் மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்” என்று கூறினார். இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.

**தியானம்:** “மரித்த இயேசு உயிர்த்து விட்டார் அல்லேலூயா, மன்னன் இயேசு ஜீவிக்கின்றார் அல்லேலூயா” தந்தையின் திட்டத்தின்படியே எமக்காக பல பாடுகள்பட்டு மரித்து உயிர்த்து வெற்றிவீரனாக எங்கள் கூடவே அவர் இருக்கின்றார். இருப்பினும் எங்கள் மத்தியில் விசுவாசமற்ற தன்மையால் பலபோராட்டங்கள் காணத்தான் செய்கின்றது. இன்றைய முதல் வாசகத்திலும் கூட பேதுருவும், யோவானும் செபிப்பதற்காக கோவிலுக்கு சென்றபோது கால் ஊனமுற்றவரைப் பார்த்து “பொன்னோ வெள்ளியோ என்னிடம் இல்லை என்னிடம் உள்ளது இயேசு ஒருவரே என்று கூறி இயேசுவின் பெயரால் எழுந்து நடவும் என்று பேதுரு அவரைக் குணப்படுத்துகிறார். (தி.பணி 3:6) இவ்வாறு குணப்படுத்தியதைத்தான் அங்குள்ள மக்கள் அதிர்ச்சியோடு பார்த்தார்கள். எனவேதான் “இறைவனின் ஊழியர்கள் இயேசுவை மகிமைப்படுத்தும்போது ஒன்றும் அறியாதவரை தீர்பிட்டு நீங்கள் கொலை செய்தீர்கள்” (தி.பணி. 3:14) என்று அவர்களை கடிந்து கொள்கிறார். அத்துடன் இவரது நம்பிக்கையின் நிமித்தம் இவர் நலமடைந்தார் என்பதையும் அங்குள்ள மக்களுக்கு தெரிவித்தார். இன்று நாங்களும் கூட அதேபோன்று தான் வாழ்கின்றோம். தபசுகாலம் முடிந்துவிட்டது, இயேசு உயிர்த்து விட்டார் அத்துடன் யாவும் நிறைவுபெற்று விட்டது என்று எண்ணி மீண்டும் பழைய வாழ்க்கையை வாழ ஆரம்பித்து விடுகிறோம். மீண்டும் நாங்கள் செய்யும் பாவகாரியங்களினால் மீண்டும் அவரை சிலுவையில் அறைந்து விடுகின்றோம் என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை. உயிர்த்த கிறிஸ்து எமது தேவைகளை சந்திக்கின்றார், நோய்களைக் குணப்படுத்துகின்றார். இவை யாவற்றையும் அவரே செய்கிறார் என்பதையும் மறந்துவிடுகின்றோம். நற்செய்தி வாசகத்திலும் இயேசு சீடர்களுக்கு காட்சியளிக்கும் பொழுது அவர்கள் முதலில் பயந்தார்கள் ஆனால் இயேசுவோ “ஏன் உள்ளத்தில் ஐயம்கொண்டு கலங்குகிறீர்கள்” என்று கூறி தனது கைகளையும், கால்களையும் காட்டி அவர்களின் ஐயத்தை தீர்த்து வைத்தார் ( லூக்.24:40). இன்று நாங்களும் இறைவனை நம்பி வாழ்ந்தாலும் கூட சில சந்தர்ப்பங்களில், நாங்களும் கலக்கமுற்று பயந்து பாதை தெரியாதவர்களாக தவிக்கும் பொழுது அவர் எமக்கும் ஆறுதல் கூறி அரவணைக்கிறவராக இருக்கிறார். மேலும் தற்பொழுது நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும், போராட்டங்களும் இயேசுவுக்கு முன்னிடம் கொடுத்து வாழாது வெளிவேடமாக வாழும் எங்களை சிந்தித்து வாழ அழைக்கும் நிகழ்வாகவே இருக்கின்றது. எனவே இறைவனுக்கு முன்னிடம் கொடுத்து, உயிர்த இயேசு எங்கள் கூடவே இருக்கின்றார் என்று விசுவசித்து அன்புகொண்டு வாழ்வோம்.